ALPHA MIND POWER

# NEWSLETTER



October 2017

## *From Guruji's desk....*



My Dear Alpha Siddhas,

I am writing to you with joy and blessings. I am sure you are enjoying life with Alpha.

Recently I started posting one affirmation daily on our whatsapp groups. This affirmation is to be repeated both at Alpha level and throughout the day whenever you can.

As you may be aware, many of our Siddhas have given excellent feedback with the use of affirmations. This is something I am very happy to share with you. What does an often repeated Affirmation do? Let us understand this.

Many Alpha Siddhas have often told me that they feel very good when they do the meditation in the morning. But after some time, thoughts become negative and the mind becomes weak. Throughout the day as they face various problems and situations, the mind keeps getting affected with negative thoughts and fear.

When a positive affirmation is repeated often during the day, it keeps bringing the mind back to track and also improves the mind energy level. For example, a affirmation like 'I am strong' may look really very simple. But imagine a situation during the day when things go wrong and you feel as if the whole world is against you. Then you remember the affirmation for the day and repeat it to yourself mentally. You will actually feel your mind energy getting better and better and as a result the situation will also improve.

As an Alpha Siddha who has understood the power of the thought forms, I am sure you will realise the power of positive affirmations being repeated in the mind.

As an Alpha Siddha who has understood the power of the thought forms, I am sure you will realise the power of positive affirmations being repeated in the mind.

The affirmations given by me are general and I keep changing them daily so that they suit the requirements of various people. If you find one affirmation is more suitable to you and you require it for a few days, go ahead and keep repeating it in addition to the new affirmation that comes for the following day.

Sometimes you may feel that an affirmation given to you would have more impact on your mind if one word is tweaked. Go ahead and do it. The affirmations given are general. If you feel the need to add another word to make it more meaningful for you personally, please do it.

Everything begins only with a thought. Meditation is a daily routine which purifies your thoughts. At the same time, affirmations help you to maintain that state of purity and enhance your mind energy throughout the day.

Our mind is a wonderful blessing. When the thoughts are on the right path, the mind is powerful. But when the thoughts wander beyond the yellow line, they often get us into trouble. With Affirmations you can pull your thoughts back to the right track and enjoy a more positive state of mind throughout the day. And this is the basic requirement to manifest your goals, have good relationships and also to enjoy good health.

Happy Affirmations!

Blessings,



**Srimatha**

### *Rishikesh Camp With Guruji*

***02.12.2017 to 10.12.2017***

**Program A** (5 days) : **"Shantagni"** –
Reprogram your mind -
Residential Retreat at Ashram

**Program B** (2 days) : Babaji Cave

(7 days + 2 days travel = Total 9 days)
You can attend either one or both the programs.

**Eligibility**

**For Program A** : Level - 1
**For Program B** : Level - 1

For further enquiries please contact AMP office: +919841272146

### குருஜியுடன் ரிஷிகேஷ் முகாம்

**02.12.2017 முதல் 10.12.2017**

**நிகழ்ச்சி A** (5 நாட்கள்) : **"சாந்தக்னி"** -
மனதை தூய்மைபடுத்து -
ஆசிரமத்தில் நடக்கும் வகுப்பு

**நிகழ்ச்சி B** ( 2 நாட்கள்) : பாபாஜி குகை

(7 நாட்கள் + 2 நாட்கள் பயணம் = மொத்தம் 9 நாட்கள்}

நீங்கள் ஒன்று அல்லது இரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளலாம்

**தகுதி**

**நிகழ்ச்சி A** : கட்டம் 1
**நிகழ்ச்சி B** : கட்டம் 1

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : +919841272146

எனதருமை ஆல்ஃபா சித்தர்களே,

மகிழ்வுடன் ஆசீர்வாதங்களுடன் இதை எழுதுகிறேன். ஆல்ஃபாவுடன் உங்கள் வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என நம்புகிறேன்.

சமீப காலமாக நமது வாட்ஸப் குழுக்களில் தினமும் ஒரு நல்வாக்கியம் கொடுத்து வருகிறேன். இந்த வாக்கியத்தை ஆல்ஃபா நிலையிலும் நாள் முழுவதும் எப்பொழுது வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம்.

நமது சித்தர்கள் பலர் இந்த நல்வாக்கியங்கள் கூறி மிக சிறப்பான அனுபவங்களை பதிவு செய்து வருவதை நீங்களும் அறிந்திருப்பீர்கள். இதை மிகுந்த மகிழ்ச்சியுடன் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அடிக்கடி சொல்லிக் கொள்ளும் நல்வாக்கியத்தால் என்ன பயன்? இதை புரிந்து கொள்ள முயற்சிப்போம்.

பல ஆல்ஃபா சித்தர்கள் என்னிடம் கூறி இருக்கிறார்கள். காலையில் தியானம் செய்யும் பொழுது மிக நன்றாக இருக்கிறது. ஆனால் சிறிது நேரம் சென்ற பிறகு எண்ணங்கள் எதிர்மறையாக மாறி மனதின் சக்தியே குறைந்து விடுகிறது என்று. நாள் முழுவதும் பல பிரச்சினைகளையும் சூழ்நிலைகளையும் சந்திக்கும் பொழுது மனம் முழுவதும் தீய எண்ணங்களும் பயமும் நிறைத்து விடுகின்றன.

ஒரு நல்வாக்கியத்தை நாள் முழுவதும் சொல்லி வரும் பொழுது இது மனதை மீண்டும் மீண்டும் சரியான பாதைக்கு கொண்டு வந்து விடுகிறது. மனதின் சக்தியையும் அதிகரிக்க செய்கிறது. உதாரணத்திற்கு “நான் சக்தி வாய்ந்தவன்” என்ற நல்வாக்கியம் மிகவும் சாதாரணமாகத்தான் தெரியும். ஆனால் இப்படி யோசித்துப் பாருங்கள். ஒரு நாள் பல பிரச்சினைகளை சந்திக்கிறீர்கள். உலகமே உங்களுக்கு எதிராக இருப்பது போல தோன்றுகிறது. அந்த சமயம் அன்றைக்கான நல்வாக்கியம் நினைவுக்கு வருகிறது. அதை பல முறை மனதில் கூறிக் கொள்கிறீர்கள். உண்மையாகவே உங்கள் மனதின் சக்தி மெல்ல மெல்ல அதிகரிப்பதை உங்களால் உணர முடியும். அதன் விளைவாக அந்த சூழ்நிலை சரியாகி விடுவதையும் காண முடியும்.

எண்ணங்களின் சக்தியை உணர்ந்த ஒரு ஆல்ஃபா சித்தர் என்ற முறையில் நல்வாக்கியங்களை அடிக்கடி மனதில் சொல்லிக் கொள்வதன் பலனையும் நிச்சயம் உணர்வீர்கள் என்று நம்புகிறேன்.

நான் கொடுக்கும் நல்வாக்கியம் பொதுவானது. எல்லோருக்கும் அது உதவ வேண்டும் என்பதால் தான் தினமும் மாற்றி வருகிறேன். ஏதேனும் ஒரு வாக்கியம் சில நாட்கள் தொடர்ந்து உங்களுக்கு தேவை என்று தோன்றினால், அதை தொடர்ந்து சொல்லி வாருங்கள். ஒவ்வொரு நாளும் வரும் வாக்கியத்துடன் சேர்த்து இதையும் சொல்லிக் கொள்ளுங்கள்.

சில சமயம் ஒரு நல்வாக்கியத்தின் ஒரு வார்த்தை மாற்றப் பட்டால் உங்கள் மனதில் அது இன்னும் அழுத்தமாக பதியும் என்று தோன்றினால், அதை மாற்றிக் கொள்ளுங்கள். ஏதேனும் ஒரு வார்த்தை சேர்க்க வேண்டும் என்று தோன்றினாலும் அதை சேர்த்து சொல்லிக் கொள்ளுங்கள்.

எல்லாமே எண்ணத்திலிருந்து தான் ஆரம்பமாகிறது. தியானம் என்பது தினமும் உங்கள் எண்ணங்களை தூய்மைபடுத்துகிறது. அதே சமயம் நல்வாக்கியங்கள் அந்த தூய்மையை நிலைக்க செய்வதுடன் உங்கள் மனதின் சக்தியை நாள் முழுவதும் அதிகமாக வைத்திருக்கவும் உதவும்.

நமது மனம் ஒரு பெரும் பொக்கிஷம். எண்ணங்கள் சரியான பாதையில் இருக்கும் பொழுது மனமும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. ஆனால் எண்ணங்கள் பாதையை தாண்டி போகும் பொழுது நமக்கு பல இன்னல்களை ஏற்படுத்தி விடும். நல்வாக்கியங்களின் மூலம் அந்த எண்ணங்களின் ஓட்டத்தை சரியான பாதைக்கு மீண்டும் நீங்கள் கொண்டு வர முடியும். நாள் முழுவதும் சிறப்பான மனநிலையை உணரவும் முடியும். உங்கள் இலட்சியங்கள் நிறைவேறவும், உறவுகள் தழைக்கவும், ஆரோக்கியம் சிறக்கவும் இது தான் அடிப்படைத் தேவை.

உங்கள் நல்வாக்கியங்கள் சிறக்கட்டும்!

ஆசீர்வாதங்கள்,

ஸ்ரீமாதா



*Guruji with Alpha Siddhas at*
*Psychic Energy Workshop in Salem 09.09.2017*



*Guruji with Alpha Siddhas at*
*Mantrashakthi Workshop in Madurai 16.09.2017*

Last week I attended **Sanjeevini** class in Chennai. A fortnight before my sugar level was very high. Today I had been to Doctor for follow-up and the Doctor was so happy and surprised that my sugar level is absolutely under control and reduced my medicine dosage. Thank you Guruji, thank you Alpha.

***Seethalaksmi, Mumbai***




சென்ற வாரம் சென்னையில் **சஞ்சீவனி** வகுப்பில் கலந்து கொண்டேன். சில வாரங்களுக்கு முன்னர் எனது சுகர் லெவல் அதிகமாக இருந்தது. இன்று மீண்டும் செக்கப் செய்ய டாக்டரிடம் சென்றேன். எனது சுகர் லெவல் இப்பொழுது மிகவும் நார்மலாக இருப்பதை கண்டு அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மருந்துகளையும் குறைத்து விட்டார். நன்றி குருஜி, நன்றி ஆல்ஃபா! **சீதாலக்ஷ்மி**, மும்பை

On 21/8/2017, my cousin 's son, Dharman who is 20years old met with an accident while going to work. Dharman was unconscious when he was taken by the ambulance to Malacca Hospital ICU. He was not moving his limbs and only tears were flowing out from his eyes. I kept him in my prayers, during chanting of **Navakshari Mantra and AMP Meditation.** I was focusing green light from head to toe on Dharman and spoke to his sub-conscious mind, basically communicating affirmations to instill confidence in him. On 28/8/17, I came to know that he was able to move his limbs and he is out from coma. Today, 31/8/2017, he is able to walk too. He is recovering well. AMP meditation is very powerful. Thanks Guruji. ***Hariharan, Malaysia***

Thanks a lot to Guruji for this wonderful ***Sanjeevani*** class. I attended yesterday's class with my back pain due to a disk compression. Before the class I suffered with pain during house hold works. But, today wow, I am quite comfortable in my activities, my family members are feeling joy with this difference. Besides, now I feel more confident about my health. Actually, I had planned to quit my job due to unbearable back pain. But, Guruji saved my life. Pranams to Srimatha! ***Alpha Siddha, Chennai.***

I am happy to mention here that **Daily Affirmation** are very effective and acts very fast in our lives. I remember repeating an affirmation Called "I attract money easily "I told this many times on that day in my mind .. few weeks later to my surprise I signed a great deal and I attracted a good sum of money out of it .. infact I was really shocked by this .. I am sharing this mainly to make every one understand that affirmations are very powerful and they act immediately ..Thanks Gurumatha.. my gratitude always to Alpha ! ***KGS Shobana, Coimbatore***

I had too many problems in my mind. Anger, fear and even guilt. I could not come to terms with many things in life. I wrote to Guruji and got **Alpha Music Therapy** by mail. I heard it only 3 times. Today my mind is much more peaceful and I am able to meditate and feel calm. This is invaluable to me. Guruji has saved my life. Million thanks Guruji!

***Geetha Rani, London***

Today I was in need of some funds to pay up some bills. Since liquid cash was not available, I was wondering where to get it from. My affirmation and focus was very strong. With **Alpha Mudra** I repeated today’s affirmation for money many times. Within 2 hours I received some funds, earlier than expected and I was able to fulfill my commitment. Thanks to Guruji and Alpha meditation.

***Geevee, Mumbai***

21.08.2017 அன்று எனது உறவினரின் மகன் தர்மன் வயது 20 விபத்துக்குள்ளானார். மலாக்கா ஆஸ்பத்திரி ICU வில் அவரை கொண்டு சேர்க்கும் பொழுது அவர் நினைவின்றி இருந்தார். அவர் கை கால்களை அசைக்காமல் இருந்தார். கண்களில் இருந்து கண்ணீர் மட்டும் வழிந்து கொண்டு இருந்தது. **நவாக்ஷரி மந்திரம் சொல்லும் பொழுதும் ஆல்ஃபா தியானத்தின் பொழுதும்** அவரை மனதில் இருத்திக் கொண்டேன். அவர் மீது பச்சை நிறம் செலுத்தி அவரது ஆழ்மனதுடன் பேசினேன். அவருக்கு தைரியம் கொடுக்கும் வகையில் நல்வாக்கியங்களை சொன்னேன். 28/08/17 அன்று அவரால் கைகால்களை அசைக்க முடிந்தது. கோமாவிலிருந்து வெளி வந்து விட்டார். இன்று 31.08.17 அவர் நடக்கவும் செய்கிறார். நன்றாக தேறி வருகிறார். ஆல்ஃபா தியானம் மிகவும் சக்தி வாய்ந்தது. நன்றி குருஜி!

ஹரிஹரன், மலேசியா

**சஞ்சீவனி** வகுப்பிற்காக குருஜிக்கு மிக்க நன்றி. நேற்று அந்த வகுப்பில் கலந்து கொண்ட பொழுது முதுகு வலியுடன் சென்றேன். வகுப்பிற்கு முன்னால் வீட்டு வேலைகளை செய்யும் பொழுது மிகவும் சிரமப்பட்டேன். ஆனால் இன்று எந்த வலியும் இன்றி சௌகரியமாக இருக்கிறேன். என் குடும்பத்தினர் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இப்பொழுது எனது உடல் நலத்தை பற்றி மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறேன். உண்மையில் தாங்க முடியாத வலியால் எனது வேலையை விட்டு விடலாம் என்று இருந்தேன். ஆனால் குருஜி எனது வாழ்வை காப்பாற்றி விட்டார். நன்றி குருஜி! ஆல்ஃபா சித்தர், சென்னை.

**தினமும் சொல்லும் நல்வாக்கியங்கள்** மிகவும் சக்தி வாய்ந்தவை என்பதை இங்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன். அத்துடன் உடனடியாக தீர்வும் தருகின்றன. ஒரு நாள் “நான் பணத்தை சுலபமாக வசீகரிக்கிறேன்” என்ற வாக்கியம் தரப்பட்டது. அதை அன்று பல முறை சொன்னேன். சில வாரங்கள் கழித்து ஒரு பெரிய வியாபார பத்திரத்தில் கையெழுத்திட்டேன். அதில் எனக்கு கணிசமான அளவு பணமும் கிடைத்தது. எனக்கு உண்மையிலேயே ஆச்சரியமாக இருந்தது. நான் இதை பகிர்வதன் நோக்கமே நல்வாக்கியங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை உடனடியாக பலனளிக்க வல்லவை என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பது தான். நன்றி குருமாதா! AMPக்கு எப்பொழுதும் எனது நன்றி ! KGS ஷோபனா, கோவை

என் மனதில் பல பிரச்சினைகள் இருந்தன. கோபம், பயம், ஏன், குற்ற உணர்வு கூட. வாழ்க்கையில் பல விஷயங்களை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. குருஜிக்கு இதைப் பற்றி எழுதினேன். **ஆல்ஃபா மியுசிக் தெரபி** இமெயில் மூலம் பெற்றுக் கொண்டேன். அதை மூன்று முறை தான் கேட்டேன். இன்று என் மனம் மிகவும் சாந்தமாக இருக்கிறது. என்னால் தியானம் செய்ய முடிகிறது. அமைதியாக இருக்கவும் முடிகிறது. இந்த மாற்றம் எனக்கு விலைமதிப்பற்றது. குருஜி எனது வாழ்வையே காப்பாற்றி உள்ளார். கோடி நன்றி குருஜி! கீதா ராணி, லண்டன்.

இன்று சில விஷயங்களுக்காக அவசரமாக பணம் தேவைப் பட்டது. கையில் பணம் இல்லாத நிலையில் எப்படி சமாளிப்பது என்று கவலையுடன் இருந்தேன். **ஆல்ஃபா முத்திரையுடன்** இன்றைய பணத்துக்கான நல்வாக்கியத்தை பல முறை மனதில் கூறிக் கொண்டேன். இரண்டு மணி நேரத்திலேயே நான் எதிர்பாராத பணம் வந்து சேர்ந்தது. அந்த செலவையும் சமாளிக்க முடிந்தது. குருஜிக்கும் ஆல்ஃபா தியானத்திற்கும் நன்றி! **ஜீவி**, மும்பை

*Guruji's TV programs are telecast in these channels. Don't miss them!*

**MAKKAL TV**

Saturday 9:00 AM

**POTHIGAI TV**

Monday 1:30 PM

***Recordings of the programs can be viewed on our website www.alphamindpower.net***

***AMP is on Facebook & WhatsApp! Connect with us to receive latest updates on upcoming events, useful articles, & share alpha experiences with fellow alpha siddhas. Not connected yet? Send us a whatsapp message on +917358595493 to get connected***

AMP பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் குரூப்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் குரூப்பில் இல்லாவிட்டால், உங்கள் மொபைல் நம்பரிலிருந்து +917358595493 என்ற நம்பருக்கு ஒரு வாட்ஸ்அப் செய்தி அனுப்பினால் நீங்கள் வாட்ஸ்அப் குரூப்பில் இணைக்கப்படுவீர்கள்

**Face book link:** https://www.facebook.com/groups/alphamindpower/

## AMP Classes Schedule

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Chennai (Tamil) | Level – 2<br>Level – 3<br>Amrut Siddhi<br>Level – 1 | 26/10/17<br>27/10/17<br>28/10/17<br>29/10/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar, T.Nagar, Chennai |
| Mumbai (English) | Sanjeevani<br>Level – 1 | 04/11/17<br>05/11/17 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel City Point, Behind Imperial Mahal Khodadad Circle Dadar T.T.Mumbai - 400014 |
| Bangalore (English) | Sanjeevani<br>Level – 1 | 11/11/17<br>12/11/17 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | The Fern Citadel, #41,Sheshadri Road, Anand Rao Circle, Bengaluru – 560 009 |
| Chennai (Tamil) | Spiritual Counseling (Eligibility Level-1) | 18/11/17<br>19/11/17 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Alpha Mind Power Office, No.4, Abusali Street, Saligramam, Chennai-600093 |
| Chennai (Tamil) | Psychic Energy<br>Level – 1 | 25/11/17<br>26/11/17 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Rishikesh Camp | Shantagni Workshop<br>Babaji Cave | 03/12/17 to 07/12/17<br>08/12/17 to 09/12/17 | | | RISHIKESH |
| Coimbatore (Tamil) | Sanjeevani<br>Sanjeevani<br>Level – 1 | 15/12/17<br>16/12/17<br>17/12/17 | Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Grand Regent, 708, Avinashi Road, Coimbatore |

NOTE: Please call & register with AMP office before attending any of the workshops

*Printed & Published for*

ALPHA MIND POWER™
"Power of the Subconscious Mind"

*Dr. Vijayalakshmi Panthaiyan*
*ALPHA MIND POWER*
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai – 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841696664*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

*PRINTED MATERIAL*